**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 289/2019</u>**

பெயர் : சுப்ரமணியன் D.W.1. Cross continuation

த/பெ. : தங்கவேல்

தேதி : 06.04.2026.

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> –**

1. நான் வாதியிடம் செய்துகொண்ட கிரய ஒப்பந்தம் சட்டப்படி காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் கிரய ஒப்பந்தத்திற்கு பிறகு கிரய ஆவணத்தை நிறைவேற்றி தரக்கோரி வாதிக்கு நான் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் நான் அவரிடம் வாய்மொழியாக கேட்டேன். நான் வாய்மொழியாக வாதியிடம் கேட்கவில்லை என்றாலும், அவ்வாறு கேட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாசாஆ 3ல் உள்ள பின் வரவில் வாதியிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் இந்த வழக்கில் அசல் ஒப்பந்தத்தை வாதியால் தாக்கல் செய்ய கோரியும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதன் அசலை நான் சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 29/2022 ல் தாக்கல் செய்துள்ளேன்.

2. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் நான் சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கையும் அசல் வழக்கு எண். 29/2022 ஐயும் சேர்த்து ஒன்றாக நடத்த கோரி நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரய ஒப்பந்தத்தில் உள்ள வரவை யார் எழுதினார்கள் என்று அவர்களது பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்திற்கு பிறகு நான் ரூ.10,000/– மற்றும் ரூ.20,000/– கொடுத்துள்ளேன் என்றாலும், நான் ரூ. 10,000/– மற்றும் ரூ. 30,000/– கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. கடைசி வரவிற்கு பிறகு 3 வருடங்களுக்குள் நான் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாததால் எனது கிரய ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை பிந்தைய

வருங்கால வரும்படியுடன் தாவா சொத்தை வாதி வசம் ஒப்படைக்க கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.